THE HON. SRI M. BHAKTAVATSALAM : A proposal to construct an anicut across Agniar in Alangudi taluk, Tiruchirapalli district, is under examination by the Chief Engineer (Irrigation). The scheme may be taken up for implementation, if feasible, under the Special Minor Irrigation Programme in the Third Five-Year Plan.

SRI V. ARUNACHALA THEVAR : 1949-ம் வருஷத்தில் கனம் அமைச்சர் அவர்கள் அங்கு வந்து அக்கினி ஆற்றைப் பார்வையிட்டு திட்டத்தை பரிசீலனை செய்ய உத்திரவிட்டார்கள். 1955-ம் வருஷ கடைசியில் திருச்சி ஜில்லா கலெக்டர் ஆபீசில் ஜில்லா அங்கத்தினர்களைக்கூட்டி ஒரு கூட்டம் நடத்தி என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப்பற்றி கிராம மக்களுக்கு தெரிவித்தார்கள். இதை நிறைவேற்றத் தாமதம் ஏற்பட்டதினால் இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது உடனடியாக எடுத்துக்கொள்வார்களா? ஏன் இவ்வளவு தாமதம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திட்டம் நன்கு பரிசீலிக்கப்பட்டு சீக்கிரத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

Group clerks in Panchayats

* 1216 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம பஞ்சாயத்து போர்டுகளில் வேலை செய்து வரும் குரூப் கிளார்க்குகளின் வேலையை கிராம மணியக்காரர்களிடம் ஒப்படைக்கப் போவது உண்மையா ?

(இ) குரூப் கிளார்க்குகளுக்கு வேறு என்ன வேலை கொடுப்பதாக உத்தேசம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (i) The work of collection of taxes has been ordered to be transferred to the Village Headman and that of maintenance of related accounts to Karnams. The Group Clerks may be continued to be employed for performing secretarial work of the Panchayats if the latter so desire.

(ii) It has been ordered that if the post of a Group Clerk-cum-Bill Collector is abolished as a result of giving effect to the orders of the Government, the incumbent should be absorbed as an attender or a clerk (according to his qualifications) in the establishment of the Panchayat Union.

SRI A. GOVINDASAMI : இப்போது கிராம கர்ணத்திற்கு வேலையிருக்கும்போது பஞ்சாயத்து வேலையையும் ஒப்படைக்கப்பட்டிருப்பது சரியா? இதனால் அவர்கள் செய்யும் வேலைக்குக் குந்தகம் ஏற்படாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கணக்கிலே ரெவின்யூவும் சேர்ந்திருப்பதனாலே ஒன்றும் குந்தகம் ஏற்படாது.

SRI A. GOVINDASAMI : நாம் பஞ்சாயத்து சட்டம் ஏற்றுக்கொண்டபோது நிர்வாகத்தில் இப்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரெவின்யூ இலாகா மூலமாக இதன் வரி வசூல் செய்யப்பட்டுவருகிறது. அதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ரெவின்யூ இலாகா என்று சொல்லும்போது, கர்ணம், வில்லேஜ் ஹெட்மான் எல்லாம் சேர்ந்திருக்கிறார்கள்.